விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 31 வியாழக்கிழமை (16.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

அரசியல் கைதிகளை அச்சுறுத்திய லொஹான்

# இராஜாங்க அமைச்சு பதவியிலிருந்து விலகல்

## இராஜிநாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டார் ஜனாதிபதி



*(கொழும்பு)*

*அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்து துப்பாக்கியால் மிரட்டிய சிறைச்சாலைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பதவி விலகியுள்ளார்.*

*இது தொடர்பில் அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார்.* (15ஆம் பக்கம் பார்க்க)

சிசிரிவி ஆதாரங்களை

## அழிப்பதற்குமுன் விசாரணை நடத்துக

(கொழும்பு)

குடிபோதையில் அமைச்சர் சிறைச்சாலைக்குள் நுழைந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். 15

## அரசியல் கைதிகளுக்கு அச்சுறுத்தல்

ஐ.நா அதிருப்தி

06ஆம் பக்கம் பார்க்க

லொஹானுக்கு எதிராக

## முறைப்பாடு கிடைத்தால் நடவடிக்கைக்கு தயார்

பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்த முன்னாள் இராஜாங்க அமைச் 15

அரசை சங்கடப்படுத்தாமல்

## நானாக முன்வந்து பதவி விலகினேன்

லொஹான் ரத்வத்த

(கொழும்பு)

அரசாங்கத்தை சங்கடப்படுத்த விரும்பாததால் தானாக முன்வந்து பதவியை இராஜி 15

## லொஹான் ரத்வத்தவை கைது செய்யுங்கள்

கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் சிலருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் 15

குழந்தை பிரசவித்த தாய்

## யாழில் கொரோனா தொற்றால் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு தாய் ஒருவர் குழந்தை பிரசவித்த நிலையில் கோவிட்-19 நோயினால் உயிரிழந் 15

கொரோனா

## 2,314

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,314 பேர் நேற்று 15

இரு வாரங்களில்

## பாடசாலைகளை திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை சுகா 15

## யாழ்., கிளிநொச்சியில் திலீபனுக்கு அஞ்சலி


கிளிநொச்சியில்...

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

ஐந்தம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து உயிர் 15


யாழ்ப்பாணத்தில்...

வவுனியாவில் 4 பேர் உட்பட

## வடக்கில் 8 பேர் கோவிட்டால் பலி



(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் 4 பேர் உட்பட வடக்கில் 8 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 15

ரூ.100 மில்லியன் பெறுமதியான

## ஐஸ் போதையுடன் மன்னாரில் 4 பேர் கைது

(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் கிராமம் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்றின் வலைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 மில்லியன் ரூபாய் பெறுமதியான 9 கிலோ 15

இந்திய வெளியுறவு செயலாளருடன்

## இலங்கை உயர்ஸ்தானிகர் புதுடில்லியில் பேச்சு

(புதுடில்லி)

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட, இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷவர்தன் ஷ்ரிங்லாவை நேற்று புதுடில்லியில் உள்ள வெளியுறவு அமைச்சகத்தில் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு, 15

கொரோனா

## 132 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 132 பேர் கோவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் 15

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **கவிதா ஜெயகாந்தன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

## சௌந்தராம்பிகை சதாசிவம்

அவர்கள் கடந்த 2021.09.07 ஆம் திகதி அன்று மறைவுற்றதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **யசோதா கருணாகரன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

## பூரணம் செல்லத்துரை

அவர்கள் கடந்த 2021.09.14 ஆம் திகதி அன்று மறைவுற்றதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், நல்லூர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர் திரு. செ. ஜெயகாந்தன் அவர்களின் பாசமிகு மாமியார்

திருமதி

## இலங்கைநாயகி தனபாலசிங்கம்



அவர்கள் நேற்று முன்தினம் (14.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா / ஸ்ரீ சோமாஸ்கந்த
இந்து ஆரம்பப் பாடசாலை சமூகம்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் கடமையாற்றும் திருமதி **கிருஸ்ணப்பிரியா நிரஞ்சன்** அவர்களின் அன்புத் தந்தையார்



## அமரர் தம்பிமுத்து கந்தையா

[ ஓய்வுநிலை ஆசிரியர் ]

அவர்கள் கடந்த 13.09.2021 (திங்கட்கிழமை) அன்று இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

தலைவர் மற்றும் ஊழியர்கள்
விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# யாழ். மாவட்டத்தில் 30 பேர் உட்பட வடக்கில் 59 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 30 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 59 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 184 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவற்றின் விபரம் வருமாறு,

**யாழ்.மாவட்டத்தில் 30 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 11 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 07 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 04 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிரலில் 02 பேர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 02 பேர்.

**வவுனியா மாவட்டத்தில் 13 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 பேர்**

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 07 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 04 பேர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 04 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், இரணைமடு விமானப்படை முகாமில் 02 பேர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

# விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை Zoom செயலியூடாக நிகழ்நிலை அமர்வாக நடைபெறும் என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அறிவித்தலின்படி குறித்த தினத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் விசேட கூட்டம் நடைபெறும். எனவே சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரையும் குறித்த நேரத்தில் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம)

# பிள்ளையார் கோவில் குளத்தில் வர்ணங்கள் மாற்றப்படாது

## அங்கஜன் இராமநாதன்



(யாழ்ப்பாணம்)

பிள்ளையார் கோவில் குளத்தில் தீட்டப்பட்ட வர்ணங்களில் மாற்றம் செய்யப்படாது என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டதாகக் கூறப்படும் செயல் உண்மையெனில் அது கண்டிக்கப்படவேண்டியது.

எமது மக்களை கவலைப்படுத்துகின்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இந்நிலையில் குறித்த இராஜாங்க அமைச்சர் பதவிவிலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம -33)

# நிதிச் சட்டமூலத்தில் சபாநாயகர் கைச்சாத்து

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு 18ஆம் இலக்க நிதிச் சட்டமூலம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் கையெழுத்திடப்பட்டு சான்றுரைப்படுத்தப்பட்டது.

கடந்த 07ஆம் திகதி இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 134 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நிதிச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பின்போது எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்புக் கோரியமையால் இந்தச் சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதற்கமைய இந்த நிதிச் சட்டம் நேற்று முதல் நடைமுறைக்குவருவதாக பாராளுமன்ற ஊடக முகாமையாளர் நிம்மி ஹாத்தியல்தெனிய குறிப்பிட்டுள்ளார். (ம)

# வவுனியாவில் 67 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 67 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 67 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-250,299)

# கண்ணீர் அஞ்சலி

யா / கோண்டாவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் கல்விசாரா உத்தியோகத்தர் திருமதி **காயத்திரி செல்வகபிலன்** அவர்களின் அன்புத் தாயார்



## அமரர் தேவி சிவராஜசிங்கம்

**மலர்வு : 09.10.1945 உதிர்வு : 11.09.2021**

அவர்கள் கடந்த 11.09.2021 (சனிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2652)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா / கோண்டாவில் இந்துக் கல்லூரி

# தமிழர்கள் விடயத்தில் ஐ.நா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**தமிழர்களின் துயர நிலையறிந்து ஐ.நா. இன்னமும் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக முன்வைத்துள்ள அறிக்கை குறித்து நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில், “இலங்கை அரசாங்கத்தின் மேல் முழுவதும் நம்பிக்கையிழந்து, கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக உங்களை மட்டுமே நம்பி காத்திருக்கும் மக்களுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தின் செப்டெம்பர் 2021 அறிக்கை என்பது, மனச் சஞ்சலத்தையும் அமைதியின்மையையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு சில வாரங்களுக்கு முன்புதான் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எந்த தேடுதலையோ வேறெந்த நடவடிக்கைகளையோ நடத்த வேண்டாம் என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கும் சூழ்நிலையில், இலங்கை அரசாங்கத்தின் மேல் நம்பிக்கைகொண்டு, அவர்கள் அனைத்தையும் செய்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்திருப்பது தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்காமல் போய் விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில்,அதனைக் கையாள்வதில், யுத்தத்திலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதில் ஐ.நா. தவறிழைத்துவிட்டதோ என்பதைக் கண்டறிவதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டதை அனைவரும் அறிவர்.

ஏற்கனவே இந்த விடயத்தில் ஐ.நா. தன்னை சுயவிமர்சனம் செய்துள்ளது.

அதேபோல் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் தவறிழைக்காமல் செயற்பட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

கடந்த மார்ச் மாத அறிக்கையிடுதலின்போது இலங்கை அரசாங்கத்திற்கு மேல் பொருளாதார, பிரயாண தடைகள் கொண்டுவரப்படுமாக இருந்தால் அது ஒட்டுமொத்தமான இலங்கை மக்களையும் பாதிக்கும் என்ற அடிப்படையில், அவ்வாறான தடைகளுக்குப் பதிலாக சர்வதேச சட்டங்களைப் பின்பற்றுகின்ற அரசுகள் தத்தமது நாடுகளில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் பரிந்துரை செய்திருந்தது.

ஆனால் இந்த இடைப்பட்ட ஆறு மாதங்களில் தமிழ் மக்களின்மீது மோசமான அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டதே தவிர, அச்சத்தின் மத்தியில் வாழ்கின்ற தமிழ் மக்களை அரவணைத்து அவர்களுக்கு நீதிகிடைப்பதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

காலம் கடந்து போவதற்கு முன்பாக இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் ஒருபகுதி குடிமக்களுக்கு எதிராகச் செயற்பட்டது என்பதையும் இதனால் அவர்களில் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் என்பதையும் ஐ.நா. சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலமாகவே இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடக்காதவாறு தடுப்பதற்கும் தமிழ் மக்களுக்கு உரித்தான நீதி கிடைப்பதற்கும் வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

ஐ.நாவின் மீதும் அதன் உறுப்பு அமைப்புகள் மீதும் தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை ஐ.நா.வும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகமும் காப்பாற்றும் என்று எதிர்பார்க்கின்றோம்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-33)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தத்திற்கு உட்பட வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானம் தொடர்பாக ஐக்கிய நாடுகளுடன் இலங்கை தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

46/1 தீர்மானத்தில் நிறுவப்பட்ட அனைத்து வெளியக முன்மொழிவுகளையும் நிராகரிப்பதாக ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து, ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான தொடர்ச்சியான முயற்சிகளின் தேவை குறித்தும் பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துக்காட்டியுள்ளது.

மேலும் சர்வதேச விதிமுறைகள் மற்றும் மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ப அது அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.(நி-5)

# கைதிகளுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் குறித்து ஐ.நா. அதிருப்தி

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகளுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதி ஹனா சிங்கர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

சிறைக்கைதிகள் தவறான முறையில் நடத்தப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ள அவர், தேசத்தின் கடமை கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)



**இலங்கை மத்திய வங்கியின் 16 ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அஜித் நிவாட் கப்ரால் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.**

# நாடு திறக்கப்பட்டாலும் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருக்கும்

## இராணுவத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அடுத்த வாரம் நாட்டைத் திறப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக கொவிட் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளர்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் கொவிட் தடுப்புக்கான செயலணியில் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் போது இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டை எவ்வாறு திறப்பது என்பது குறித்த பரிந்துரை இந்த வாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும்.

குறித்த பரிந்துரைகளின் படி நாட்டைத் திறப்பது தொடர் பில் முடிவு எடுக்கப்படும்.

நாடு திறந்தாலும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக்கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ஓய்வு பெற்றான் ஜோக்கர் மன்னன்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

38 வயதான மலிங்க, எதிர்வரும் இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அண்மையில் வெளியான உலகக் கிண்ண தொடருக்கான இலங்கை அணியில் அவரது பெயர் இடம்பெற வில்லை.

இந்தநிலையில், ஏற்கனவே ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வை அறிவித்திருந்த மலிங்க, தற்போது அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு பல வெற்றிகளையும் சாதனைகளையும் நிலை நாட்டிய லசித் மலிங்க ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையில், அவருக்கு இந்நாள் மற்றும் முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் ஆகியோர் சமூக வலைத்தளங்களின் ஊடாக வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். (4-6)

# நாய்க்கு விருது வழங்கியது சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மாதத்தின் சிறந்த வீரர், வீராங்கனை விருதோடு மாதத்தின் சிறந்த நாய் என்ற ஒரு விருதை தற்போது வழங்கியுள்ளது. இது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஓகஸ்ட் மாத சிறந்த வீரராக ஜோ ரூட் தேர்வு செய்யப்பட மகளிர் கிரிக்கெட்டில் அயர்லாந்தின் ஈமியர் ரிச்சர்ட்சன் தேர்வு செய்யப்பட்டார்.ஆனால் இவர்களோடு புதிதாக ஒரு ஜீவனும் ஓகஸ்டின் சிறந்த விருதைப் பெற்றது. அயர்லாந்து இருபது-20 உலகக் கிண்ண அரையிறுதியில் மைதானத்திற்குள் ஓடிவந்த நாய்க்கும் சிறந்த நாய் விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

அதாவது இந்தப் போட்டியின் போது இந்த நாயின் பீல்டிங் முயற்சியை பாராட்டி இந்த விருது கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அயர்லாந்து கிரிக்கெட்டில் இந்த நாய் தான் சிறந்த பீல்டர் என்று வர்ணிக்கப்பட்டது.மேலும் பிளேயர் ஒப் த மொமண்ட் விருதையும் இந்த நாய் தட்டிச் சென்றது. ஐசிசி இந்த நாயின் போட்டோவை தன் அதிகார பூர்வ டுவிட்டர்பக்கத்தில் வெளியிட்டு மகிழ்ந்துள்ளது. (4-6)

# புதிய ஐ.பி.எல் அணிகளுக்கு ஒக்டோபரில் ஏலம்

ஒக்டோபர் 15ஆம் திகதியுடன் ஐ.பி.எல். தொடர் முடிவடையும் நிலையில், அடுத்த இரண்டு நாட்களில் புதிய அணிகளுக்கான ஏலம் நடைபெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். 2021 சீசன் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டது. தற்போது ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் தொடங்குகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்- மும்பை இந்தியன்ஸ் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இதனால்,ரசிகர்கள் ஐபிஎல். தொடரை எதிர்பார்த்து ஆவலுடன் இருக்கின்றனர்.

அடுத்த ஆண்டு இரண்டு அணிகள் கூடுதலாக சேர்க்கப்பட இருக்கின்றன. இதற்கான டெண்டரை ஏற்கனவே பி.சி.சி.ஐ. வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய அணிகளுக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடைபெறும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இரண்டு அணிகள் கூடுதலாக சேர்வதால், ஒவ்வொரு அணியும் நான்கு வீரர்களை மட்டும் தக்கவைத்துக்கொண்டு பிற வீரர்களை வெளியேற்ற வேண்டும். அதன்பின் பொது ஏலத்தில் வீரர்களை தேர்வு செய்ய வேண்டும். (4-6)

# எவரெஸ்ட் பிரீமியர் லீக்கில் ஏழு இலங்கை வீரர்கள்



நேபாளத்தில் நடைபெறவுள்ள 2021 எவரெஸ்ட் பிரீமியர் லீக் தொடரில் ஏழு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 25 - ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

2021 எவரெஸ்ட் பிரீமியர் லீக் இல் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி நேபாளம் புறப்படவுள்ளனர்.

போட்டியில் உபுல் தரங்க, தம்மிக பிரசாத், சீகுகே பிரசன்ன, அசேல குணரத்ன, ஓசத பெர்னாண்டோ, சந்துன் வீரக்கொடி, சேஹான் ஆராச்சிகே ஆகிய இலங்கை வீரர்களே பங்கேற்கவுள்ளனர். (4-6)

# மருத்துவ ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் ஜெர்சியை மாற்றியது ஆர்.சி.பி



ஐபிஎல் தொடரில் பெங்களூர் அணிபுதிய ஜெர்சியுடன் களமிறங்கவுள்ளதாகவும், அதற்கான காரணத்தையும் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில், எதிர்வரும்19ஆம் திகதி ரத்து செய்யப்பட்ட ஐபிஎல் தொடர் நடைபெறவுள்ளது.

இதற்கான முதல் போட்டியில் மும்பை மற்றும்சென்னை அணிகள் மோதுகின்றன. அதன்பின் பெங்களூர் அணி எதிர்வரும் 20ஆம் திகதி கொல்கத்தா அணியுடன் மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் பெங்களூர் அணிவழக்கமாக அணியும் சிவப்பு நிற ஜெர்சியுடன் விளையாடாமல், நீலநிறம் கொண்ட புதிய ஜெர்சியுடன் களமிறங்குகிறது.

கொரோனாவிற்கு எதிராக முன்நின்று போராடி வரும், மருத்துவ ஊழியர்களை கௌரவிக்கும் வகையிலும், அவர்களுக்கு தேவையான PPE உபகரணங்கள் வாங்குவதற்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

அதாவது, போட்டி முடிந்த பிறகு ஒவ்வொரு வீரரும் அவர்கள் அணிந்திருந்த ஜெர்ஸியில் கையெழுத்திட்டு அதனை ஏலத்திற்கு விடவுள்ளனர். அதன் மூலம் கிடைக்கும் பணத்தை ஒட்சிசன் வாங்குவதற்கு நிதியுதவியாக கொடுக்கப்படுமாம்,

மேலும் அந்த ஜெர்ஸியின் பின்புறத்தில் கொரோனா தடுப்புசிகள் போட்டுக் கொள்ளவும், பாதுகாப்பாக இருங்கள் என்ற விழிப்புணர்வு வாசகங்கள் இடம் பெற்றுள்ளது.

பெங்களூர் அணியின் இந்தச் செயலுக்கு, ஐபிஎல் ரசிகர்கள் பலரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். (4-6)

## இங்கிலிஷ் பிரீமியர் லீக்

# போட்டியின் நடுவே வீரரின் கால் முறிவு



இங்கிலிஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் கடந்த ஞாயிறன்று நடந்த ஆட்டத்தில் லிவர்பூல் வீரர் ஹார்வி எலியட்டின் கால் உடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

லீட்ஸ் யுனைடெட் அணிக்கு எதிராக நடந்த ஆட்டத்தில் லிவர்பூல் அணி வீரர் தூக்கிஅடித்த பந்தை வலது புறம் வாங்கி அபாரமாக எடுத்துச் சென்றார் ஹார்வி எலியட்.

அப்போது லீட்ஸ் யுனைடெட் அணி வீரர் பாஸ்கல் ஸ்ட்ரூய்க் இடையில் காலை விட்டு டேக்கிள் செய்தார். இதனால் நிலைதவறி கீழே விழுந்தார் எலியட்.

கால் உடைந்த ஹார்விஸ்ட்ரெச்சரில் எடுத்துச் செல்லப்பட்டார். அதேவேளை இப்படி அபாயகரமாக டேக்கிள் செய்த பாஸ்கல் ஸ்ட்ருய்ட் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

மேலும் இவரது கால் உடைந்ததால் இவர் மீண்டும் கால்பந்து ஆடுவது சந்தேகம் என ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். (4-6)

## இராசிபலன்

16.09.2021
ஆவணி 31, வியாழக்கிழமை
தசமி முற்பகல் 10.57 மணிவரை
பூராடம் காலை 7.03 மணிவரை
உத்திராடம் பின்னிரவு 5.56 மணிவரை
சுபநேரம் 7.38-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** மதிப்பிற்கு பின்னர் மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மலரும், ஆரோக்கியத்தில் கவனம் எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய் தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்** செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

**தனுசு** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பெரியோர்களின் உதவிகளால் சில நன்மைகள் நடைபெறலாம், ஆன்மீக சிந்தனைகள் மேலோங்கும் நாள்.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய வேண்டி வரலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

உலகத்திலேயே தலை சிறந்த ஆசிரியர் அனுபவம் தான்

# விமான நிலையத்தில் பி.சி.ஆர் ஆய்வகம் மூன்று மணி நேரத்துக்குள் பெறுபேறு

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர். ஆய்வகம் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இந்தப் புதிய பிசிஆர். ஆய்வகமானது நாளாந்தம் 7 ஆயிரம் பிசிஆர்.சோதனைகளை முன்னெடுக்கவுள்ளது எனவும் இதன் மூலம் நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பிசி. ஆர். சோதனை அறிக்கையானது மூன்று மணி நேரத்துக்குள் வழங்கப்படும் எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (நி-5)

# பதுக்கி வைத்திருந்த பால்மா பொதிகள் மீட்கப்பட்டு மக்களுக்கு விற்பனை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் பல இடங்களில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பால்மா பொதிகள் நுகர்வோர் அதிகாரசபையினரால் கைப்பற்றப்பட்டன.

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலையில் பொருட்களை பதுக்கி வைத்திருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், மட்டக்களப்பு காத்தான்குடியில் பலசரக்கு கடைகளில் பதுக்கி வைத்திருந்த பால்மா பொதிகள் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளினால் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது பல இலட்சம் ரூபா பெறுமதியான பால்மா பொதிகளை மீட்டு மக்களுக்கு விற்பனை செய்துள்ளனர்.

பொது மக்களிடத்திலிருந்து தமக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து குறித்த வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்பு சோதனை மேற்கொண்டதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார். (நி-5)

# ரத்வத்தையின் மிலேச்சத்தனமான செயற்பாடு இனவழிப்புக்களை மீள நினைவுபடுத்தியுள்ளது

## சிறீதரன் எம்.பி கண்டனம்

(பரந்தன்)

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர், தனது நண்பர் குழாமுடன் சிறைச்சாலைக்குள் நுழைந்ததோடு, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை மிலேச்சத்தனமாக, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

இச் செயற்பாடானது, இந்த நாட்டின் சட்டம், நீதி,இன நல்லிணக்கம் என்பவற்றை கேள்விக்குட்படுத்துவதோடு, கடந்த காலங்களில் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனஅழிப்புச் சம்பவங்களை மீள நினைவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

சிங்களவர்களுடனான நல்லிணக்கத்தை வளர்க்கும் செயற்பாடுகளில் தமிழர் தரப்பு இதய சுத்தியோடு ஈடுபட வேண்டுமென வலியுறுத்தி வரும் சர்வதேசம், நல்லிணக்கத்தை அடியோடு ஆட்டம் காண வைக்கும் இத்தகைய இனவன்முறைகள் குறித்தும் தனது கவனத்தைத் திருப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-100-316-312)

# அரசாங்கத்திற்கான கால அவகாசத்தை ஐ.நா. வழங்குகிறதா? - செல்வம் கேள்வி

(மன்னார்)

கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வரவேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடையமாக அமைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரிக்க முடியாது ஆனால்கவலையளிக்கிறது.

குறித்த அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தினால் கூறப்பட்ட விடயங்கள் குறிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாது என தெரிவித்த விடயங்கள் மீண்டும் ஒத்துழைக்கத் தயார் என்று கூறப்படுகின்ற நிலையில் கூறப்பட்ட விடயங்களுக்கு மாறாக எமது தமிழ் பிரதேசங்களில் பல்வேறு அத்து மீறல்கள் நடந்து கொண்டு உள்ளதை நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

அவ் விடயம் சம்பந்தமான கருத்துக்கள் கூறப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது.

கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வரவேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடயமாக அமைந்துள்ளது.

குறித்த அறிக்கையின் ஊடாக நாங்கள் எதிர் பார்க்கின்ற சர்வதேசம் என்கிற விடயம் கைவிட்டு போய் விடுமோ? என்கின்ற கேள்வி எங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.குறித்த அறிக்கையில் எமது பல பிரச்சினைகள் தொடர்பாக மேலோட்டமாக காட்டப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நிலைப்பாட்டை இந்த அறிக்கை சொல்லவில்லை. அதனை விட இலங்கை அரசாங்கத்தை நம்புவதாகவும், புதிதாக தெரிவு செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் நல்லதொரு மனிதர் என்கின்ற போர்வையில் அவரை புகழ்ந்து பேசுகின்ற ஒரு நிலையும் அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்குகின்றது போன்ற ஒரு நிலையும் காணப்படுகிறது.

இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் இருக்கும் வரை தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. கால தாமதத்தை ஏற்படுத்துகின்ற வாய்ப்பாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-285)

# 1,164 கிலோ மஞ்சள் மூடைகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள வீடு ஒன்றில்,சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை அடம்பன் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர் . அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை சோதனையிட்டனர்.

இதன் போது குறித்த வீட்டில் பதுக்கிவைத்திருந்த 29 மூடைகளைக் கொண்ட 1164 கிலோ உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை மீட்டுள்ளனர்.

மேலும் குறித்த வீட்டின் உரிமையாளரையும் அடம்பன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு,கைது செய்யப்பட்ட நபரை அடம்பன் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றத்தில் குறித்த நபர் ஆஜர்படுத்தப்பட உள்ளதோடு, மீட்கப்பட்ட மஞ்சள் கட்டி மூட்டைகளும் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர். (4-5-255)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு 150,000 ரூபாய் அபராதம்

(அராலி)

கசிப்பு வடிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கு மல்லாகம் நீதிமன்றினால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரத்தினைச் சேர்ந்த இருவர் கடந்த12 ஆம் திகதி 196 லீற்றர் கோடாவுடன் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில்முற்படுத்தப்பட்ட வேளை அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் கடந்த 10 ஆம் திகதி தொல்புரம் - வீராவத்தை பகுதியில் 10 லீட்டர் கோடா மற்றும் 1 லீட்டர் கசிப்புடன் வட்டுக் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது. (4-5-104)

# மணல் அகழ்வு; வாகனங்கள் மீட்பு

(கரணவாய்)

**அனுமதியற்ற முறையில் மணல் ஏற்றிவந்த மூன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் நெல்லியடி பொலிஸாரால் மீட்கப்பட்டது.**

**வடமராட்சி முள்ளி பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் தேடுதல் நடத்திய போது வாகனத்தில் மணல் ஏற்றியமை கண்டு பிடிக்கப்பட்டது.**

**இதனையடுத்து குறித்த மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களைப் பிடிக்க முற்பட்ட போது வாகன த்தை விட்டு தப்பிச் சென்றனர்.**

**பின்னர் குறித்த வாகனங்களை பொலிஸார் மீட்டனர்.** (4-5-60)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணைய வழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 15 நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள் குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-5)

# தடுப்பூசி அட்டை பரிசோதனை செலுத்தாதோருக்கு பீ.சி.ஆர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளில் நேற்று புதன் கிழமை முதல் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட அட்டை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொது சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொண்டமைக்கான அட்டை பரிசோதனை செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

முதல் கட்டமாக 30 வயதிற்கு மேற்பட்டவர்களின் கொரோனாத் தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.



30 வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களின் முழுமையான விபரங்களை பொது சுகாதார பரிசோதகர்கள் பதிவு செய்துள்ளனர்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசியை செலுத்தவும்,அல்லது அன்ரிஜன் மற்றும் பீ.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் சுகாதார துறையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

# துவரங்குளத்தின் கீழான வயல் காணிகளை விடுவிக்க கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட துவரங்குளம் புனரமைக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்துள்ள போதும் அதன் கீழுள்ள வயல் காணிகள் இதுவரை வனவளத் திணைக்கத்தினால் விடுவிக்கப்பட்டு தமக்குப் பகிர்தளிக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

அதாவது குறித்த குளம் புனரமைக்கப்பட்டு வயல் காணிகளை துப்பரவு செய்து மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் ஒவ்வொரு விவசாயக் குடும்பங்களுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் 56 குடும்பங்களுக்கு கடந்த 2014ஆம் ஆண்டு அதற்கான காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இதுவரை குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லைஎனவே குறித்த விவசாய காணிகளை விடுவித்து தருமாறு விவசாயக்குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி குளம் மற்றும் அதன் கீழ் உள்ள பகுதிகள் 1921 ஆம் ஆண்டுஜூன்மாதம்10ஆம் திகதி வனவள திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட இடங்கள் என்ற அடிப்படையில் வர்த்தமானி மூலம் பாதுகாக்கப்பட்ட வனங்களாக அறிவிக்கப்பட்ட பகுதியாக காணப்படுவதால்இதனை விடுவிப்பது சாத்தியமற்ற விடயமாக காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-5-315)



**கச்சாய் வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள ஒட்டங்கேணி சனசமூக நிலையம் தனது முதலாம் ஆண்டு நிறைவையொட்டி பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படும் 50 குடும்பங்களுக்கு பால்மா மற்றும் உலருணவுப் பொதிகளை அண்மையில் வழங்கி வைத்தது.** (படம்:-சுபேசன்)

## கசிப்புடன் ஒருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை புற்றளை பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 45 லீற்றர் கோடா மற்றும் 10லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (4-5-60)



**அமரர் மாணிக்கம் மயில்வாகனத்தின் 31 ஆம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஊடாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1983 ஆம் ஆண்டு மாணவ அணியினர் குடும்பத் தலைவிகளுக்கு பயன்தரு மரங்கள் வழங்கி வைத்தனர்.** (படம்:-சுபேசன்)

# தேசிய நல்லிணக்கம், மனித உரிமைகளில் இலங்கை முன்னேற வேண்டும்

## ஜப்பான் அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் பிரச்சினையில் இலங்கையின் முன்னேற்றத்திற்கு இன்னும் இடம் இருப்பதாக ஜப்பான் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயங்களிலும் இலங்கை தொடர்ந்து தன்னார்வ நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியம் என்று ஜப்பானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில், தேசிய நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய துறைகளில் முன்னேற்றத்திற்கு இடமுண்டு.

விசாரணை மற்றும் இழப்பீடு செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான ஜப்பானின் நிரந்தர தூதர் கென் ஒகனிவா தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில், நேற்று முன்தினம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவது அமர்வின் போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். (நி-5)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
20
06
1961

இறப்பு
26
09
2020

அமரர்.திரு. **இராமலிங்கம் கனகலிங்கம்**

திதி: வளர்பிறை தசமி

எங்கள் வாழ்வின் ஒளி விளக்காய்
எங்களுக்கு வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
ஓராண்டு சென்றாலும் தாங்காத வலிகளோடும்
தூங்காத விழிகளுடனும் வற்றாத கண்ணீருடனும்
பிரிந்து தவிக்கின்றோம் அப்பா!

அப்பா என்ற சொல்லுக்கு இலக்கணமானவரே!
அன்பால் எம்மை தாங்கியவரே!
எங்களை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?

ஆயிரம் ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
எங்கள் அப்பாவுக்கு நிகராகுமோ?
உங்களை நினைக்கும் போதெல்லாம்
ஆறுதல் சொல்லவருவது கண்ணீர் மட்டும்தான்
மீண்டும் வருவீரோ அப்பா!

(C-2656)

கைதடி மத்தி,
குமரநகர்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி மற்றும் பிள்ளைகள்

# 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்.திரு. **கார்த்திகேசு பொன்னுச்சாமி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02.04.1937 | 17.08.2021 |

விண்ணுலகம் நீ சென்றாலும்
உன் பணிகள் தொடரும் ஐயா

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(C-2657)

துயருறும் நண்பர் குழாம்
வினோபா நூலகம், வினோபா நகர், கச்சாய்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகரக்குள கடைத்தொகுதிக்கும் - ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட நகரக்குளப் பகுதியில் கார் தரிப்பிடம் அமைத்து குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக் கோரல்.**

BID: NO- JMC/MB/CP/2021-01

1) யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையிலான நகரக்குளப்பகுதியில் கார்த்தரிப்பிடம் அமைத்து 10 வருட காலப்பகுதிக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2) கார் தரிப்பிடத்திற்கான கேள்விகோரலில் கஸ்தூரியார் வீதி, மின்சாரநிலைய வீதி மற்றும் ஸ்ரான்லிவீதியில் கடைகள் உள்ள வர்த்தகர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

3) கஸ்தூரியார் வீதிக்கும் நகரகுளத்திற்கும் இடையில் அமைக்கப்படும் கார்த்தரிப்பிடத்தில் 14 கார்த்தரிப்பிடங்கள் நகரக்குள கடைத்தொகுதியில் உள்ள வர்த்தகர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். அவர்களிடம் இருந்து கேள்வி கிடைக்காத பட்சத்தில் ஏனையவர்களுக்கு வழங்கப்படும்.

**4) விலை மனுக் கோரப்படும் குத்தகைக்கு வழங்கப்படவுள்ள கார்த்தரிப்பிட விபரம் வருமாறு,**

| 29 கார் தரிப்பிடங்களின் நிலப்பகுதி | தரைப்பிரதேசம் ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான (சதுர அடி) | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான அடிப்படைக் கேள்வித் தொகை (நன்மதிப்பு) ரூபா | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான மாதாந்த வாடகை (ரூபா) | ஒவ்வொரு தரிப்பிடத்திற்குமான பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|---|
| A 1- A 24 (24 தரிப்பிடம்) | 142 | 500,000 | 1,250 | 5,000 |
| B 1- B5 (5 தரிப்பிடம்) | 142 | 500,000 | 1,250 | 5,000 |

5) 1. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடிய அடிப்படை விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்றவிண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள், உள்ளடங்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 2000/= இனை செலுத்திமாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் 2021.09.17 முதல் 2021.10.07 ஆம் திகதிவரை வாரத்தின் வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.00 மணி வரையான காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

4. விலைமனுக்களை ஏற்றல் 2021.10.08 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முடிவடைவதுடன் மாநகரசபையின் பௌதீக திட்டமிடல் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்காக சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6). இது பற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதி 021-221 5978 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்வதன் மூலமும் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணிவரை நேரில் சமுகமளிப்பதன் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-2658)

# புலம்பெயர் தொழிலாளர் மீதான நடமாட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தியது சிங்கப்பூர்

(சிங்கப்பூர்)

கொரோனா வைரஸ் தொற்று நோயை அடுத்து புலம்பெயர் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த நடமாட்டக் கட்டுப்பாடுகளை சிங்கப்பூர் நேற்று புதன் கிழமை முதல் தளர்த்தியுள்ளது.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதை அடுத்து சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாக குடியிருப்புக்களுக்குள் முடங்கியிருந்த புலம்பெயர் தொழிலாளர்கள் பலர் நேற்று சுதந்திரமாக வெளியேறி சிங்கப்பூர் லிட்டில் இந்தியா பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

சிங்கப்பூரின் ஏனைய பகுதிகள் ஓரளவு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினாலும் குறைந்த ஊதியம் பெறும் புலம்பெயர் தொழிலாளர்கள் அத்தியாவசியப் பணிகள் தவிர்த்து, அவர்களது குடியிருப்புகளுக்குள் முடக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஒவ்வொரு வாரமும் 6 மணி நேரங்கள் பொது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கும் வகையில் கட்டுப்பாடுகளில் நேற்று தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரு மாதம் கழித்து இந்தத் திட்டம் குறித்து மீளாய்வு செய்யப்படும் என சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நிதி மையமான சிங்கப்பூர், பல்லாயிரக்கணக்கான தெற்காசிய தொழிலாளர்கள் மீது கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்தது.

இதேவேளை, உலகின் மிக உயர்ந்த தடுப்பூசி நிர்வகிப்பு வீதத்தை சிங்கப்பூர் கொண்டுள்ளது. அங்கு 81% வீதம் பேர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றுள்ளதாக மனிதவள அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# தீவிரவாதிகளுக்கு உதவினால் பாகிஸ்தானுடனான உறவு துண்டிக்கப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு உதவினால் பாகிஸ்தானுடனான உறவைத் துண்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.**

அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஆன்டனி பிளிங்கென், பாகிஸ்தான் இரட்டை வேடமிடுவதாகத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானின் பங்கு என்ன என்பதைப் பொறுத்து அந்நாட்டுடனான உறவைத் துண்டிப்பது குறித்து அமெரிக்கா முடிவெடுக்கும் என்றும் பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தலிபான் அமைச்சரவையில் ஹக்கானி தீவிரவாதிகளை இடம்பெறச் செய்ய பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காபூலில் தீவிரவாதத் தாக்குதலில் அமெரிக்கர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயற்படும் பாகிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அன்று கைதிகள்; இன்று ஆட்சியாளர்கள் காபூல் சிறையை பார்வையிட்ட தலிபான்கள்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைந்து ஒரு மாதமாகிவிட்டது. இந்நிலையில் தலைநகர் காபூலில் உள்ள புல் இ சர்கி சிறைச்சாலையை தலிபான் கொமாண்டர்கள் சிலர் பார்வையிட்டனர். அவர்களில் ஒருவர் சிறைவாசிகள் விட்டுச் சென்ற பளு தூக்குதல் கருவியை தூக்கிப் பார்க்கும் புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

காபூல் புறநகரில் இருக்கும் இந்த சிறைச்சாலையின் சுவர்கள் பல கொடூரங்களின் சாட்சி சொல்லும் எனக்கூறுகின்றனர் அதில் கைதிகளாக இருந்து மீண்டவர்கள்.

இந்தச்சிறையில் முந்தைய ஆட்சியின்போது தலிபான்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், தீவிரவாத செயல்களில் ஈடுபட்டவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், இந்த சிறைச்சாலையைக் கைப்பற்றிய தலிபான்கள் அனைவரையும் விடுவித்தனர். அங்கிருந்த அரசுக் காவலர்களும் வெளியேறினர். தற்போது அங்கு போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஒரு சிலர் மட்டும் அடைப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிறைச்சாலையை தனது சகாக்களுடன் பார்வையிட்ட தலிபான் கொமாண்டர் ஒருவர், நான் இந்தச் சிறையில் 14 மாதங்கள் இருந்துள்ளேன். என் வாழ்வின் இருண்ட நாட்கள் அவை. இந்தச் சிறையில் கொடுமைகள் பல நடக்கும். இப்போது நான் இந்த சிறைக்கே பயமின்றி வந்துள்ளேன் என்று கூறினார். இந்தச் சிறையில் 5000 பேர் தான் இருக்க முடியும். ஆனால் முந்தைய ஆட்சியில் இந்தச் சிறையில் எப்போதும் 10000 பேர் அடைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் இந்தச் சிறையில் மனித உரிமை மீறல் குறித்து அவ்வப்போது சமூக செயற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தன்னைத் தானே தனிமைப்படுத்தி கொண்ட புடின்



(மொஸ்கோ)

நெருங்கிய வட்டத்தில் இருந்த சில நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டார்.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதிமாளிகையான கிரெம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு நெருங்கிய வட்டத்தில் இருந்த நபருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் புடின் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். ஜனாதிபதி புடின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி இரண்டு டோஸும் செலுத்திக் கொண்டுள்ளார். இருப்பினும் அவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். (நி-5)

# ஒரே நாளில் கொன்று குவிக்கப்பட்ட 1400 இற்கும் மேற்பட்ட டொல்பின்கள்

## சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு

(கனடா)

வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள பேரோ தீவில் ஒரே நாளில் 1,400 இற்கும் மேற்பட்ட டொல்பின்கள் கொன்று குவிக்கப்பட்டன.

பாரம்பரிய திருவிழாவை கொண்டாடிய ஃபேரோ தீவு மக்கள், படகுகள் மூலம் 1,428 டொல்பின்களை பிடித்து கரைக்கு எடுத்து வந்தனர்.

பின்னர் அவற்றை ஒவ்வொன்றாக கொன்று குவித்தனர்.

இதனால் கடற்கரைப் பகுதி நீர் முழுவதும், இரத்தம் சிந்தப்பட்டு சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது.



ஒரே நேரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான டொல்பின்கள் கொல்லப்பட்டதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். (நி-5)

# மீண்டும் ஏவுகணைகளை பரிசோதித்த வடகொரியா




(பியாங்யாங்)

வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஒரு ஜோடி பாலிஸ்டிக் ஏவுகணைகளை நேற்று வீசியதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

மத்திய வடகொரியாவின் ஒரு தளத்தில் இருந்து ஏவப்பட்ட இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகள் நேற்று பிற்பகல் கொரிய தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரை பரப்பை நோக்கி பறந்து சென்றதாக தென் கொரியாவின் கூட்டுத் தலைவர்கள் ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

அணுசக்தி திறன் கொண்ட ஒரு ஏவுகணையை பரிசோதித்த சில நாட்களுக்குப் பிறகு வடகொரிய இந்த ஏவுகணை பரிசோதனையினை மேற்கொண்டுள்ளதுடன், பதற்றத்தையும் அதிகரித்துள்ளது.

பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகள் வடகொரியாவின் அணுசக்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வடிவமைக்கப்பட்ட ஐ.நா.வின் தீர்மானங்களை மீறுவதாக அமைந்துள்ளன. (நி-5)

# தமிழருக்கு எதிராக நிகழும் அநீதிக்கு மற்றுமொரு சாட்சி

## அரசியல் கைதிகளை அச்சுறுத்தியது தொடர்பில் அருட்தந்தை சக்திவேல் கண்டனம்

(நெளுக்குளம்)

**அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராகவும் நீட்டிய துப்பாக்கினை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலவரம் குறித்து நேற்று அவரால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை மனித உரிமைக்கு மதிப்பு அளிக்கின்ற நாடு எனில் குறித்த செயலில் ஈடுபட்ட இராஜாங்க அமைச்சரை அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கி துரித விசாரணைக்கு உட்படுத்தி உரிய தண்டனை வழங்குவதோடு மனநல சிகிச்சையும் அளித்தல் வேண்டும்.

சிறைச்சாலை கைதிகளை பாதுகாக்க வேண்டிய அமைச்சரே இவ்வாறான ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படுவதோடு அனைத்து அரசியல் கைதிகளையும் பாதுகாப்பு மிகுந்த தமிழர் பிரதேசங்களில் சிறைச்சாலைக்கு மாற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும்

இந்நாட்டின் இனவாத அரசியல் தமிழ் மக்கள் இனிவரும் காலங்களிலும் அடக்கிஒடுக்கும் என்பதற்கு இன்னுமொரு சாட்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஒரே சக்தியாக நின்றால் மட்டுமே எமது எதிர்காலம் காக்கப்படும். இச் சம்பவத்தை கருத்திற்கொண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலையுடனான இன அழிப்பிற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிகிடைக்க வழியேற்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கொண்டு செல்லுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-5-299)

## சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிக்க விழிப்புணர்வு செயற்றிட்டம்



(குருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சேதனப்பசளை உற்பத்தியை இரட்டிப்பாக்கும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு செயற்பாடு நேற்று கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் 23 ஆயிரம் மெற்றிக்தொன் சேதனப்பசளை தேவைப்பாடாகவுள்ளது.

10 ஆயிரம் தொன் உற்பத்தி செய்வதற்கே இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.மீதி 13 ஆயிரம் தொன் தேவைப்படுகிறது.

எனவே மாவட்டத்தின் சேதனப்பசளை உற்பத்தியை இரட்டிப்பாக்கும் நோக்குடன் மாவட்டத்தின் எல்லா இடங்களிலும் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் தெரிவித்தார். (4-5-316)



சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து மாற்றுத்திறனாளி ஆனவர்களுக்கு செயற்கைக் கால் மற்றும் கை என்பன வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. (படம் - சப்தசங்கரி)

## யானைகளின் அச்சுறுத்தலில் மூன்றுமுறிப்பு கிராமம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மூன்றுமுறிப்பு கிராமத்திற்கு உரிய போக்குவரத்து வசதியின்மை மற்றும் காட்டு யானைகளின் தொல்லை என்பவற்றால் 211 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தினமும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளன.

குறித்த பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை தினமும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது குறிப்பாக மேற்படி பிரதேசங்களில் குரங்கு மற்றும் ஏனைய காட்டு விலங்குகளின் அழிவுகளும் அதிகளவில் காணப்படுவதாகவும் உயிர் ஆபத்துக்களை கூட எதிர்கொள்ளும் நிலை காணப் படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(4-5-315)

## சோதனை நடவடிக்கைக்கு வர்த்தகர்கள் இடையூறு

(குருமன்காடு)

வவுனியா, குருமன்காடு பகுதியில் பழ விற்பனை வாகனங்கள் மீது நகரசபையினர் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்த நிலையில், நகரசபையினரின் செயற்பாட்டிற்கு பழ வியாபாரிகளினால் இடையூறும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா, குருமன்காடு பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது நேற்று முன்தினம் நகரசபையினரால் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, குருமன்காடு பகுதியில் வாகனங்களில் பழ விற்பனையில் ஈடுபட்ட இரு வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாது இடம்பெற்ற வியாபார நடவடிக்கைகள் குறித்து நகரசபையினரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போது, பழ வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் நகர சபைக்கு ஒத்துழைப்பு வழங்காது போக்குவரத்து பொலிஸாரை அழைத்து நகர சபையினருக்கு எதிராக முறைபாடு செய்தனர்.

இது தொடர்பில் நகரசபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, போக்குவரத்து பொலிஸார் அவ்விடத்தில் இருந்து வெளியேறினர்.

இதேவேளை, நகரசபையின் அறிவுறுத்தல்களை மீறி கொவிட் பரவலுக்கு வழிவகுக்கும் வகையில் பொறுப்பற்ற வகையில் இடம்பெறும் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார்.

(4-5-250)

## வவுனியா மருதோடையில் கல் அகழ்விற்கு அனுமதி கோரியமைக்கு மக்கள் எதிர்ப்பு

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மருதோடை குளத்தில் கல் அகழ்வதற்கு அனுமதி கோரியமையால் அப்பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.வவுனியா மருதோடை மற்றும் வேலர் சின்னக்குளத்தின் அருகாமையில் ஏற்கனவே சிலர் 100 அடிக்கும் கூடுதலாக கல் அகழ்வு முன்பு மேற் கொண்டுள்ளனர். இதன் மூல மாக அகழப்பட்ட பகுதியில் 80 அடிக்கும் மேலாக நீர் தேங்கிஉள்ளதுடன், இவ் இரு குளங்களுக்குமான நீர் வரத்து குறைவடைந்து நீர்வற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தின் கீழ் சுமார் 120 ஏக்கர் வயல்காணி காணப்படுவதுடன் இருபோக பயிர்ச்செய்கை மேற்கொண்டு வந்த நிலையில் தற்போது ஒருபோக பயிர்ச்செய்கைகூட செய்வதற்கு நீர் பற்றாக்குறையாக உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.அத்தோடு இவ்வாறு ஆழமாக கல் அகழ்வதனால் இதற்கு அருகாமையில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் கிணறுகளிலும் நீர் வற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இக்குளத்தின் அலகரை பகுதியில் உள்ள கற்களை அகழ்வதற்கு அனுமதிகள் கோரப்பட்டுள்ளதுடன் அப்பகுதியை கல் உடைப்பதற்காக துப்பரவு செய்யும் செயற்பாடு ஆரப்பிக்கப்பட்டமையால் இப்பிரதேச மக்களிற்கும் குறித்த பகுதியினருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் , மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் குறித்த இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பாக ஆராய்ந்து இரு தரப்பினருடனும் கலந்துரையாடினர்.

அதன் படி குறித்த கல் அகழ்வதற்கு கோரப்பட்ட பகுதியானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் அளவீடு செய்யப்பட்டு குளத்தின் எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிக்குள் காணப்படுவதன் காரணமாக கல் அகழ்வதற்கான அனுமதி வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாஸனால் மறுக்கப்பட்டது. (4-5-299)

# விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட மீறல்கள் குறித்து ஐ.நா. அவதானம் செலுத்தவில்லை

## வாசுதேவ



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்கள் நடுநிலையான தன்மையில் காணப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஏன் அவதானம் செலுத்தவில்லை என நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை தொடர்பில் விவாதம் ஒவ்வொரு முறையும் இடம் பெறுகிறது. இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித பேரவை ஒரு தலைப்பட்சமாக செயற்படுகின்றமை பல விடயங்கள் ஊடாக வெளிப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்கள் நடுநிலையானதாக காணப்பட வேண்டும். ஆனால் தற்போது மனித உரிமை பேரவை தனது பொதுக் கொள்கைக்கு அப்பாற்பட்டு செயற்படுகிறது. 30 வருட கால யுத்தம் ஒரு இனத்திற்கு மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இலங்கை மக்கள் அனைவருக்கும் பல்வேறு வழிமுறையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

புலம் பெயர் அமைப்புக்கள் தங்களின் சுய தேவைக்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். யுத்தத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட துரிதகர அபிவிருத்தி குறித்து இவர்கள் கருத்துரைப்பதில்லை.

இராணுவத்தினர் தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின்ஆணையாளர் விடுதலைப்புலிகள் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து கவனம் செலுத்த வில்லை.

யுத்தம் நிறைவுப் பெற்றதன் பின்னர் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தரப்பினரால் இடம் பெற்ற குற்றங்களை அரசாங்கத்தின் சர்வாதிகார போக்கு என கருத முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

# அனுராதபுரம் சிறைச்சாலையில் இழிவாக நடந்த அமைச்சரை பதவி விலக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியில் அரசாங்க அமைச்சரின் இழிவான மற்றும் சட்டவிரோதமான நடத்தையை வன்மையாக கண்டிக்கிறேன். இந்தக் கேவலமான சட்டவிரோத செயல் நமது நாட்டின் அராஜக நிலைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரை உடனடியாக பதவியில் இருந்து நீக்குமாறு நான் ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றேன் என்று நேற்று தனது சமூக வலைத்தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

எங்கள் தாய்நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதில் இந்த அரசுக்கு கடப்பாடு உள்ளது. இந்த சட்டவிரோதமான மற்றும் கேவலமான செயல் நமது நாட்டில் மனித உரிமைகளின் நிலைமை வேகமாக குறைந்து வருவதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

கடந்த 12 ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொகான்ரத்வத்த, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் அமர்த்தி அநாகரிகமாக நடந்துகொண்டதுடன், தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்த துப்பாக்கியை இரண்டு அரசியல் கைதிகளது தலைமீது வைத்து அச்சுறுத்தியதாக வெளியாகியுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-5)

# கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளான நோயாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு கறுப்பு பூஞ்சை தொற்று ஏற்படுவதாக பிரதிசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். எனினும், இந்த கறுப்பு பூஞ்சைத் தொற்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும் அபாயம் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2406

### பிரியா




### சர்மி




### விதுசன்




### பானுசன்




### கெசி




### கன்சிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எந்த வேளையிலும் மீண்டுமொரு தீவிரவாதத் தாக்குதல் இடம்பெறலாம்

## ஞானசார தேரர் பரபரப்புத் தகவல்

**(கொழும்பு) உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தீவிர வாதத் தாக்குதல்களைப் போன்று எந்த வேளையிலும் மற்றுமொரு தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பரபரப்பு தகவல் ஒன்றை பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் வெளியிட்டுள்ளார்.**



நியூஸிலாந்தில் தாக்குதல் நடத்திய இளைஞரைப் போல அடிப்படைவாத சிந்தனை கொண்ட இளைஞர்கள் பலர் தாக்குதல்களுக்கு தயாராகியுள்ளமை பற்றிய முழு விபரமும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தாம் தெரியப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய நேர்காணலில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

அடிப்படைவாதத்தை சிந்தனையில் ஏற்றிக் கொண்ட இளைஞர்களை எந்தச் சந்தர்ப்பமாகிலும் தாக்குதலுக்குப் பயன்படுத்த முடியும். இதுபோன்ற பயிற்சி மற்றும் போதனைகளைப் பெற்ற திரளான இளைஞர்கள் இலங்கையில் இருக்கின்றனர்.

நியூஸிலாந்தின் ஒக்லாண்டில் அண்மையில் இலங்கைப் பிரஜை ஒருவர் தாக்குதல் நடத்தியிருந்தார். அந்நாட்டுப் பிரதமர் அதனை அறிவித்திருந்தார்.

குறித்த நபர் பற்றி 2017 ஆம் ஆண்டிலிருந்து விசாரணை செய்ததோடு பின்னர் கைது செய்யப்பட்டு விடுதலையும் செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்தும் அந்நாட்டுப் பாதுகாப்புத் தரப்பினரது கண்காணிப்பில் தான் இருந்தனர்.

அடிப்படைவாத சிந்தனையை தலையில் வைத்துக் கொண்டிருக்கின்றவர் ஆயுதமற்ற தற்கொலை குண்டுதாரி. ஆகவே அப்படியான இளைஞர்கள் இன்றும் இருக்கின்றனர்.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான பிரதான சூத்திரதாரியை பாதுகாப்புத் துறையினர் இன்றும் தேடிவருகின்றனர். 30 வருடப் போர் முடிந்த பின்னர் இதுபோன்ற குண்டுகள் வெடிக்காது என்று நினைத்த காலத்தில் தான் மிலேச்சமான தாக்குதல் இடம்பெற்றது.

மேலும் தாக்குதல் நடத்தக்கூடிய தரப்பினர், தாக்குதல் காலம் கூட எனக்குத் தெரியும். அவை பற்றிய முழுத் தகவல்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றேன். அவர்கள் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் மற்றுமொரு தாக்குதலை நடத்தலாம்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையிலுள்ள உறுப்பினர்கள் எனக்கு முன்னே முன்னிலையாகினால் இதுபற்றிய தகவல்களை அம்பலப்படுத்துவேன் என அவர் அறை கூவல் விடுத்துள்ளார். (நி-5)

# அஜித் நிவாட் கப்ராலை கைது செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றுவதை தடுத்து ஆணையீட்டு எழுத்தாணையை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் நேற்று முன்தினம் குறித்த மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதி செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் துணை ஆளுநர், சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அஜித் நிவாட் கப்ரால் ஏற்கனவே மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கிக்கு 10.4 பில்லியன் ரூபாய் தொடக்கம் 10.6 பில்லியன் ரூபாய் வரை நட்டம் ஏற்பட்டதாக மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முறிகள் மோசடி தொடர்பிலான கணக்காய்வின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளதால், அவரை கைது செய்து வாக்குமூலம் பதிவு செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு விடுமாறும் கீர்த்தி தென்னக்கோன் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கலாநிதி ஜே.டி மன்னப்பெரும இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் அவர் கையளித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் பதவியை இராஜினாமா செய்வதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-5)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தவறு செய்யுங்கள்

ஒருத்தர் நின்று கொண்டிருந்தார். நின்று கொண்டே யோசனை செய்து கொண்டிருந்தார்.என்ன யோசனை என்று அவரைப் பார்த்து இன்னொருவர் கேட்டார்.

எப்படி எழுந்திருப்பது என்று யோசனை செய்து கொண்டிருக்கின்றேன் என்றார்.ஏற்கனவே நின்று கொண்டிருக்கின்ற ஒருவர் எப்படி எழுந்திருப்பது என்று யோசனை செய்தாராம். இது எப்படி இருக்கு பாருங்கள்.

கீழே விழுந்தால் தானே எழுந்திருக்க முடியும்? அதனால் அவர் முதலில் கீழே விழவேண்டும் அதற்கு பின்பு தானே அவர் எழுந்திருக்க முடியும்.

இந்த உலகத்திலே நடக்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னர் கீழே விழாத மனிதர்கள் யாராவது உண்டா? விழுந்து புரண்டு எழுந்து தானே நடக்கக்கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு முக்கியமான உண்மை. உலகத்திலே தவறு செய்யாத மனிதர்களே கிடையாது. அதனால் எப்பவாவது உங்கள் வாழ்க்கையில் தவறு செய்தால் அப்படியே மனம் உடைந்து போய் உட்கார்ந்துவிடாதீர்கள். ஒரு தவறு நடந்து போய்விட்டது என்றால் அதை ஒரு பாடமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே தவறு மறுபடியும் நடக்காத படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.தடைக்கல்லை படிக்கல்லாக மாற்றிக் கொள்ள வேண்டும்.ஒரு அலுவலகம் அங்கே ஒரு உயர் அதிகாரி சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கினார். அவர் தனக்குக் கீழே பணி புரிகிறவர்களிடம் என்ன சொல்வாராம் தெரியுமா?

இந்த நிறுவனத்திலே நீங்கள் எத்தனை தடவை வேண்டும் என்றாலும் தவறு செய்யலாம். ஆனால் ஒரு விடயம் ஒரே தவறை மறுபடியும் செய்யக் கூடாது என்பாராம்.

இதை மேம்போக்காகப் பார்க்கிறதற்கு..அவர் ஏதோ தன்னுடைய ஊழியர்களைத் தவறு செய்யத் தூண்டுவது மாதிரி. தெரியும். ஆனால் உண்மை அப்படி இல்லை.

இன்றைக்கு நடப்பது என்ன தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத் தான் மறுபடியும் மறுபடியும் செய்கின்றார்கள்.

விளையாட்டு வீரர்கள் ஒரே மாதிரியான தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வது உண்டு.கணக்கு எழுதுபவரைப் பாருங்கள்..ஒரே தவறை மறுபடியும் செய்வார். அலுவலகத்திற்கு வருபவர்களைக் கவனியுங்கள்.ஒரு நாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை.. ஆனால் தினமும் தாமதமாக வருவார்கள்.

சரி... இது மாதிரி, செய்த தவறையே திரும்பத் திரும்பச் செய்வதற்கு என்ன காரணம்?

சோம்பல்,ஞாபக மறதி,கவனக்குறைவு தன்னுடைய திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை இப்படி இதிலே ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம்.ஒரு தடவை செய்த தவறை மறுபடியும் செய்வதில்லை..என்று முடிவு செய்து கொண்டு அதை செயல்படுத்தக் கற்றுக் கொண்ட போதும் வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

ஒருத்தர் தன்னுடைய இரண்டு காதிலேயும் கட்டு போட்டுக் கொண்டு வந்தார். என்ன சேர் ஆகிவிட்டது என்று விசாரித்தார். அவருடைய நண்பர்.

ஒன்றுமில்லை சேர்.. வீட்டிலே மிகவும் ஆர்வமாக டி.வி.யில் கிரிக்கெட் மேச் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் மனைவி துணிக்கு அயர்ன் செய்து கொண்டிருந்தார்கள். அயர்ன் பாக்சை அப்படியே வைத்துக் கொண்டு அடுப்பங்கரைக்குப் போய் விட்டார்கள்.

அந்த சமயம் பார்த்து டெலிபோன் மணி அடித்தது அவசரமாக ஓடிப்போய் அதை எடுத்துக் காதிலே வைத்தேன். அப்பொழுது தான் தெரியும் அது அயர்ன் பாக்ஸ் என்பது. சூடாக இருந்ததால் சுட்டுப் போய்விட்டது..ஒரு காது சரி.. சேர்.. இரண்டு காதும் ஏன் சேர் அப்படி ஆகிவிட்டது? என்றார் அவர்.

அதே ஆள் மறுபடியும் போன் செய்தானே! அப்படி என்றார் இவர்.




# முட்டாள் பையன்



மூன்று நாட்களுக்குப் பிறகு அரசனின் தூதர்கள் மீண்டும் வந்தனர்.

அரசர் ஒரு பெரிய விருந்து நடத்துவதாகவும் அதற்கு எல்லாரும் வர வேண்டும் என்று இம்முறை கூறினர்.

கிழவன்தனது குடும்பத்தார் அனைவரும் வயிறு நிறைய சாப்பிட்டனர். விருந்தின் இறுதியில், இளவரசி விருந்தினர்களிடையே சென்று ஒவ்வொருவருக்கும்குளிர்பானம் ஊற்றினாள். முடிவில், சுந்தரத்திடம் வந்தாள்.

அவன் கந்தல் ஆடை உடுத்தியிருந்தான். முகமெல்லாம் கரியாக இருந்து கையில் கட்டுப் போட்டிருந்தான்.

"ஏன் உங்கள் கையில் கட்டு போடப்பட்டிருக்கிறது என்று கட்டை அவிழ்த்தாள். உள்ளே விரலில் விலை மதிப்பற்ற மோதிரம் மினுமினுத்துக் கொண்டிருந்தது. இளவரசி அவன் கையைப் பிடித்துக் கொண்டு, தன்னுடைய தந்தையிடம் சென்றாள்.

"இவர்தான் என் எதிர்காலக் கணவர்" என்று கூறி, அந்த மோதிரத்தைக் காட்டினாள்.

அரசன் மகிழ்ந்தான். அவர் பணியாட்களை அழைத்து சுந்தரத்தை அலங்கரிக்க சொன்னார்.

அரசனின் பணியாட்கள் சுந்தரத்தை நன்கு குளிப்பாட்டினர். விலை உயர்ந்த ஆடைகளை அவனுக்கு அணிவித்தனர்.

இப்போது அவன் வனப்பும், வசீகரமுமிக்க வாலிபனாகத் தோற்றமளித்தான். அவனுடைய தந்தைக்கும், சகோதரர்களுக்கும் அவர்களது கண்களையே நம்ப முடியவில்லை.

சுந்தரத்துக்கும், இளவரசிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. (முற்றும்)

# மகாபாரதம்




**மன்னன் மயில் போல் இருக்க வேண்டும்**

மன்னருக்கு உரிய பண்புகள் பற்றி மேலும் அறிய விரும்புவதாக தருமர் கூற பீஷ்மர் உரைக்கலானார்.

"தருமா... எல்லா உயிரினங்களையும் காக்க வேண்டியது மன்னனது கடமை ஆகும். மன்னன் மயிலைப் போல திகழ வேண்டும்.

மயில் தன் பல வண்ணத் தோகையை எவ்விதம் அமைத்துக்கொள்கிறதோ அவ்விதம் தருமம் அறிந்த மன்னன் பலவிதமான வடிவங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வரி வசூலிக்கும் போது சத்தியத்தையும், நேர்மையையும் மேற்கொண்டு நடுவு நிலையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

தண்டனை தரும் போது கடுமையாகவும், உதவி செய்யும் போது அன்புடனும் தோன்ற வேண்டும்.

மயில் சரத்காலத்தில் ஒலி எழுப்பாது இருப்பதைப் போல அரசன் மந்திராலோசனையை வெளியிடாமல் காக்க வேண்டும். மன்னன் மயிலைப் போல இனிய குரலும், மென்மையான தோற்றமும் தன் செயலில் ஆற்றலும் உள்ளவனாகத் திகழ வேண்டும்.

மயில் நீரருவிகளில் நாட்டம் உள்ளதாக இருப்பதைப் போல மன்னன் வரவு செலவுகளில் கவனமாக இருக்க வேண்டும்.

மயில் மலையில் உள்ள மழை நீரை விரும்பியிருப்பதைப் போல மன்னன் ஆன்றோரைச் சார்ந்திருக்க வேண்டும்.

மயில் தன் தலையில் உள்ள சிகையை எப்போதும் தூக்கி வைத்திருப்பதைப் போல மன்னன் தருமக் கொடி கட்டி அடையாளம் காட்ட வேண்டும்.

மயில் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு பாம்பு முதலியவற்றைத் தாக்க எப்போதும் விழிப்புடன் இருப்பதைப் போல மன்னன் தண்ட நீதி வழங்குவதில் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மயில் தான் இருக்கும் மரத்திலிருந்து செழுமையான மற்றொரு மரத்துக்குச் செல்வது போல, மன்னன் வரவு செலவுகளைக் கண்டு, வரவு அதிகமாகவும் செலவு குறைவாகவும் உள்ள செயல்களில் ஈடுபட வேண்டும்.

(தொடரும்)

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.
– அலன் தார்ன்ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐ.நா சபையின் நடவடிக்கையில்தான் ஈழத் தமிழர்களின் உரிமை தங்கியுள்ளது!

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகி இருக்கின்ற இந்நேரத்தில், இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் காட்டமான அறிக்கையை முன்வைத்துள்ளார்.

இதில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனக் கூறிய ஆணையாளர்; இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு இராணுவ மயமாகின்றது என்பதைப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு இராணுவ மயமாகின்றது என்ற குற்றச்சாட்டு ராஜபக்ஷ அரசாங்கத்துக்குப் பலத்த அவமானத்தை ஏற்படுத்திபிருக்கும்.

தவிர, எதிர்காலத்தில் இலங்கையின் ஜனநாயகத் தன்மை கேள்விக்குட்படும் என்பதையும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் சூக்குமமாகக் கூறியுள்ளார்.

இங்குதான் சிங்கள மக்கள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் கருசனை கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, முன்பெல்லாம் ஈழத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை இந்தியாவாக இருந்தது.

எனினும் இந்தியப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னரும் ராஜிவ் காந்தியின் மரணத்துக்குப் பின்பாகவும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் இந்தியா தலையிடும் என்ற நம்பிக்கை முற்றுமாக அறுந்து போயிற்று.

இதற்கு மேலாக அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் எங்களின் விடயத்தில் நேரடியாகத் தலையிடும் என்ற நம்பிக்கைகள் முகிழ்த்தபோதிலும் அண்டை நாடான இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு, ஈழத் தமிழர்களின் விடயத்தில் தலையிடு வதற்கு மேற்போந்த நாடுகள் தயாராக இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆக, உலக நாடுகளின் நேரடித் தலையீட்டின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்பது சாத்தியப்பாடானதல்ல.

இந்நிலையில், இலங்கையில் நடந்த தமிழின அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா சபை எடுக்கக்கூடிய காத்திரமான நடவடிக்கைகள் மட்டுமே ஈழத் தமிழர்களின் இருப்பையும் உரிமையையும் அவர்களின் வாழ்வியலையும் பாதுகாப்பதாக அமையும்.

எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவை இனியும் காலம் கடத்தாமல், ஈழத் தமிழ்மக்களுக்கு நீதியையும் உரிமையையும் பெற்றுத் தர வேண்டும். இந்த நம்பிக்கை ஒன்றுதான் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தி நிற்கிறது.

### வவுனியாவில் கோவிட்டால் தாய் மரணம்

## தனிமைப்படுத்தலை மீறி தொற்றுடன் யாழ். சென்ற மகனுக்கு எதிராக வழக்கு

(வவுனியா)

வவுனியாவில் கோவிட் தொற்றுக்குள்ளான தாய் ஒருவர் மரணமடைந்துள்ள நிலையில், குறித்த தாயுடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரது மகன் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிவீட்டில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணம் சென்றுள்ள நிலையில் அவருக்கு எதிராக பொது சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, கோவில்குளம், 5 ஆம் ஒழுங்கையில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தாய் (வயது - 73) மற்றும் மகன் (வயது-20) ஆகியோர் அவர்களது வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் தாய்க்கு நோய்த் தாக்கம் அதிகரித்தமையால் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த போது சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

தாய் மரணமடைந்த தகவலை தெரியப்படுத்தி குடும்பத்தினரை தகனக் கிரியைக்கு அழைப்பதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள் அவர்களது தனிமைப்படுத்தப்பட்டிருந்த வீட்டிற்கு சென்ற போது தொற்றுக்குள்ளான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மகன் வீட்டில் இருக்கவில்லை. இது தொடர்பில் வீட்டில் இருந்த அவர்களது உறவினர்களிடம் விசாரித்த போது அவர் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிசெயற்பட்ட குறித்த இளைஞனுக்கு எதிராக வவுனியா பொலிஸார் ஊடாக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ம-250,299)

### க.பொ.த உயர்தர பரீட்சைக்கு

## 2,922 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்தன

### கல்வி அமைச்சு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2 ஆயிரத்து 922 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு6 ஆயிரத்து 589 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த 2 பரீட்சைகளுக்குமான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட இறுதித் திகதி நேற்றுடன் முடிவடைந்தது.

பாடசாலை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அதிபர்கள் மூலம் கல்வி அமைச்சிற்கு அனுப்ப வேண்டும்.

எவ்வாறாயினும், தற்போது சம்பள முரண்பாடுகள் காரணமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அதிபர் தொழிற்சங்கங்கள் உயர்தர மாணவர்களின் விண்ணப்பங்களை அங்கீகரிக்கப் போவதில்லை என்று சமீபத்தில் முடிவு செய்தன.

அதன்படி, கல்வி அமைச்சில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நாட்டில் கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக அமைச்சு இதுவரை பரீட்சைத் திகதிகளை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தின் போது எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது என்பது தொடர்பாக நேற்றையதினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மதியம் ஒரு மணிக்கு இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன், யாழ். மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அடுத்த வருடத்திற்கான மாநகர சபை பட்ஜெட்டின்போது எவ்வகையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் குறிப்பாக பூங்காக்கள், மைதானங்கள், பொதுச் சந்தைகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ம-33)

### மருத்துவக் குறிப்பு

நன்னாரி வேரை இடித்துச் சாறெடுத்து பாலில் கலந்து சாப்பிட்டுவர தோல் சம்பந்தப்பட்ட வியாதியையும் இரத்தத்திலுள்ள கோளாறுகளை குணப்படுத்தும்

## சத்திய தரிசனம்



### பிரமாண்ட லிங்கம்

- எல்லாவற்றுக்கும் மேலாக நன்கு ஆராய்ந்து அதனால் உனக்கு நன்மை விளையும் எனத் திருப்தி அடைந்த பின்னரே நீ ஆன்மிக சாதனையிலும் உலகியல் வாழ்விலும் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும்.இல்லையென்றால் அது அழுகின்ற நகரத்தின் கதைபோல ஆகிவிடும்.
- ஒருநாள் ராணியின் நெருங்கி சேடிப்பெண் ஒருத்தி பெருந்துயரத்தில் அழுதுகொண்டே அரண்மனைக்கு வந்தாள். அதைப்பார்த்து ராணியும் கண்ணீர் விடத் தொடங்கினார்.
- ராணி அழுவதைப் பார்த்து பணிப்பெண்கள் அனைவரும் அழ, அது ஆண் சேவகர்களுக்கும் தொற்றிக்கொண்டது. ஆற்றவொண்ணாத் துயரத்தில் ராணி அழுவதைப் பார்த்து இரங்கிய ராஜா தானும் கண்ணீர் உகுத்தார்.
- இவற்றைப் பார்த்த அந்த நகரமே தொடர்ந்து கதறிஅழுதது. இறுதியாக ஒரு புத்திசாலிஎதற்காக அழுகை என்று கேட்கத் தொடங்க அந்தக் கேள்வி பலர் வழியே சென்று ராணியை அடைந்தது. (தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

38

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இந்த உரிமையை பிரயோகிப்பதற்கு தேவையானதொரு அம்சமாக தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் வடக்கு-கிழக்கில் சுயாட்சி ஏற்பாடு ஒன்றை நாம் கோரினோம்.

1956 ஆம் ஆண்டு, பெரும்பான்மையினரிடம் இருந்த பாராளுமன்ற பெரும்பான்மையை பயன்படுத்திசிங்களம் மட்டும் அரச கரும மொழியாக ஆக்கப்பட்டது.

இந்தக்காலத்திற்கும் 1970களின் பிற்பகுதிக்கும் இடைப்பட்டக் காலப் பகுதியில், முதலில் வெளிநாட்டவர்கள் நாட்டை வெற்றி கொண்டமையினாலும் பின்னர் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத, பெரும்பான்மை ஆதிக்கத்தை வலுப்படுத்திய ஓர் ஆட்சி முறையினாலும் இழந்த சுய நிர்ணய உரிமையை மீண்டும் வென்றெடுப்பதற்காக பல்வேறு அமைதிவழி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனநாயக்க ஆகிய இரு பிரதம மந்திரிகளுக்கும் தமிழ் மக்களின் தலைவராகிய எஸ்.ஜே.வி செல்வநாயகத்திற்கும் இடையில் முறையே 1957 ஆம் ஆண்டிலும் 1965 ஆம் ஆண்டிலும் பிரதானமாக வடக்கு- கிழக்கில் உள்ள அரச காணிகளின் பராதினப்படுத்தல் தொடர்பான ஒப்பந்தங்களும் செய்துகொள்ளப்பட்டன. இவ்விரு ஒப்பந்தங்களுமே அன்றைய அரசாங்கங்களினால் ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டன.

1970 இல் தனக்கு உகந்த அரசியலமைப்பொன்றை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்புப் பேரவை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இ.த.கவும் இச் செயன்முறையில் பங்குபற்றியதோடு, தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக தீர்ப்பிற்கமைய ஒன்றுபட்ட ஒரு நாட்டிற்குள் பகிரப்படும் இறையாண்மை எனும் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

இவ் ஆலோசனைகள் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட, இதக உறுப்பினர்கள் அரசியல் அமைப்புப் பேரவையிலிருந்து வெளியேறினர்.

இதேபோன்று, 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நிறைவேற்றத்திற்கும் தமிழ் மக்கள் தமது சம்மதத்தை வழங்கவில்லை.

இவ்வாறு, முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்புகள் ஒற்றைஆட்சி அரச மைப்பை பாதுகாத்து, தொடர்ந்து சிங்களத்தை ஒரே அரசகருமமொழியாகக்கொண்டு செயற்பட்டதோடு, பௌத்தத்திற்கு முதன்மையான இடம் வழங்கின. அவை, தமிழ் மக்களின் சம்மதமின்றியே நிறைவேற்றப்பட்டன.

1948 இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து, தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசமாகிய வடக்கு- கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாக திட்டமிட்ட அரச ஆதரவு பெற்ற குடியேற்றங்கள் நிறைவேற்றப்பட்டன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றபின்னர் வடக்கில் இது முழு முனைப்புடன் தொடர்கிறது. அரசாங்கம் அடக்குமுறை இராணுவ பிரசன்னமொன்றை வட மாகாணத்தில் தொடர்ந்து பேணி வருவதோடு, 'இராணுவ நோக்கத்திற்காக' பெருமளவு காணிகளை கையகப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

தமிழ் இளைஞர்களின் மூன்றாம் நிலைக் கல்வியைப் பாதித்த தரப்படுத்தல் மற்றும் அரச துறையில் வேலை வாய்ப்புக்களில் பாரபட்சம் ஆகியன அடங்கலான பாரபட்சச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, 1956, 1958, 1961, 1977, 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக காலத்துக்குக் காலம் திட்டமிட்ட வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அரசினால் எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. இச் சந்தர்ப்பங்களிலெல்லாம், நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசினால் வடக்கு- கிழக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இதன் மூலம் இவ்விரு மாகாணங்களும் தமிழர் தம் தாயகமாக அங்கீகரிக்கப்பட்டன.

## அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் !

1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பை உடனடுத்து, தமிழ் பேசும் மக்களுக்கு பெருமளவு தன்னாதிக்கம் வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, 1987 இல் (அரசியல்) ஏற்பாடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைகளை அமைப்பதற்கு இம் மாற்றங்கள் வழி வகுத்ததோடு, அது மேலும் விருத்தி செய்யப்படும் என்று அதி உயர் மட்டத்தில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அத்தகைய பல முயற்சிகள் 1993 ஆம் ஆண்டின் மங்கள முனசிங்க தெரிவுக்குழ தீர்வாலோசனைகள், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 1995, 1997 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான அரசாங்கத்தின் ஆலோசனைகள் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் 2006 டிசெம்பரில் சர்வ கட்சி பல்லின வல்லுநர் குழுவின் பெரும்பான்மையினர் அறிக்கை ஆகியவற்றிற்கு இட்டுச்சென்றன.

எரியும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசியல் அரங்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாதிருந்த அதேவேளை, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தது. ஆரம்பத்தில் பல ஆயுத இயக்கங்கள் இருந்தபோதிலும், 1987 இல் இருந்து இப் போராட்டத்தை தொடரும் ஒரே ஆயுத இயக்கமாக த.ஈ.வி.பு. தோற்றம் பெற்றது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் த.ஈ.வி.புகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டன.

2002 பெப்ரவரிமாதம் த.ஈ.வி.புவும் இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்த ஒப்பந்தமொனறில் கைச்சாத்திட்டதோடு, அதன் பின்னர், ஒஸ்லோ அறிக்கையென்று அழைக்கப்படும் பின்வரும் கோட்பாட்டுத்தொகுதியொன்றின் மீது இணக்கம் கண்டன.

'ஒன்றுபட்ட ஓர் இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளகசுய நிர்ணய உரிமை எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த தீர்வொன்றை ஆராய்தல்'.

## இராணுவத் தாக்குதலும் அதன் பின் விளைவுகளும் !

எனினும், இந்த யுத்த நிறுத்தம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. அரசாங்கப் படைகளுக்கும் த.ஈ.வி. புலிகளுக்கும் இடையில் யுத்தம் மூண்டு 2009 மே 19 ஆம் திகதி இவ் இராணுவ மோதல்முடிவுக்கு வந்தது. 30 வருட பகைமையும் யுத்தமும் தமிழ் பேசும் வடக்கு-கிழக்குப் பகுதியை பேரழிவுக்கு உள்ளாக்கியதோடு, தமிழ் மக்களையும் கதியற்றவர்களாக்கியது. பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் பாதுகாப்புத்தேடி ஏனைய நாடுகளுக்கு தப்பிச் செல்ல, மேலுமொரு ஐந்து இலட்சம் தமிழர்கள் நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்தனர்.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் மோதல் நிலவிய ஆண்டுகளில் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத் தாக்குதலின் இறுதிக் கட்டங்களில் எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட குடிமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பலர் அவயவங்களை இழந்தும் கடுமையான காயங்களுக்குள்ளாகியும் உள அழுத்தங்களுக்கும் ஒழுங்கீனங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

மேலும், 500,000 ற்கும் மேற்பட்ட தமிழர்கள் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டதோடு, பலர் எல்லா நாகரிக மற்றும் சர்வதேச நியமங்களுக்கும் எதிராக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இம் மக்கள் தமது பூர்வீக இடங்களில் மீள் குடியமர்த்தப்படுவார்கள் என சர்வதேச சமூகத்துக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் வாக்குறுதியளிக்கப்பட்டபோதும் அவர்களின் மீள் குடியேற்றம் இன்னும் நிறைவடையாமல் உள்ளது.

## அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு !

தேசிய பிரச்சனையின் தீர்வுக்கு மிக முக்கியமானதென த.தே.கூ கருதுகின்ற கோட்பாடுகளும் விசேட அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இத்தீவில் வாழுகின்ற மக்களின் மத்தியில் பகிரப்பட்டதொரு இறையாண்மையின் மூலம் ஆட்சி அதிகாரங்களை பகிர்வது தொடர்பானதாகும்.

உண்மையான நல்லிணக்கத்தையும் நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தையும் இலங்கை மக்கள் அனைவருக்குமான அபிவிருத்தியையும் எய்துவதற்கு அதிகாரப் பகிர்வின் பின்வரும் முக்கிய அம்சங்கள் அடிப்படையாக அமைகின்றன.

(தொடரும்...)

## 132 பேர் பலி...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 11, 699 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 66 ஆண்களும் 66 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## நானாக முன்...

நாமாச் செய்ததாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலை தன்னிடம் ஒப்படைக்கப் பட்டபோது, அது ஒரு பெரிய நெருப்புக்குவியலாக இருந்ததாகவும் குறுகிய காலத்தில் தீயை அணைத்து சிறையை ஒரு நிலையான இடத்திற்கு கொண்டுவர முடிந்தது.

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து இராஜிநாமா செய்வதில் எனக்கு மகிழ்ச்சியே.

தன்னைப் பற்றிவெளியான சில ஊடக அறிக்கைகளால் அரசுக்கு சங்கடமாக இருக்கும் என்று கருதியதால் நானாக முன்வந்து சிறைத்துறை இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்தாலும், அவர் தொடர்ந்து மாணிக்கம் மற்றும் இரத்தினத் தொழில்துறை இராஜாங்க அமைச்சர் பதவியை வகிப்பேன்.

தன்னை நம்பி சிறை அமைச்சை தன்னிடம் ஒப்படைத்ததற்காக இதயத்தின் அடிப்பகுதியில் இருந்து ஜனாதிபதிக்கு நன்றி.

நான் அமைச்சராக இருந்த காலத்தில் தனக்கு ஆதரவளித்த அனைத்து அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி என்றார். (ம)

## முறைப்பாடு...

சுரும் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சருமான லொஹான் ரத்வத்த தொடர்பில் பொலிஸாருக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி வெலிக்கடை, அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அச்சிறைச்சாலைகள் அமைந்துள்ள பொலிஸ் பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக எந்த முறைப்பாடுகளும் நேற்று நண்பகல் 12 மணிவரை பதிவாகியிருக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்நிலையில் சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பில், முறைப்பாடுகள் இன்றி விசாரணைகளை முன்னெடுப்பது சிரமம் எனவும், முறைப்பாடுகள் ஏதும் கிடைக்கப் பெறின் அம்முறைப்பாட்டுக்கு அமைய தேவையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று நண்பகல்வரை, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அமைச்சில் கடமையாற்றிஇருந்த நிலையில், அவருக்கு எதிரான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்காமல் இருக்கலாம் என சுட்டிக்காட்டிய பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர், அவர் இராஜினாமா செய்துள்ள பின்னணியில் சிலவேளைகளில் இனிமேல் முறைப்பாடு கிடைக்க வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டார். (ம)

## லொஹான்...

சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சரை கைது செய்து வழக்குத் தாக்கல் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இராஜாங்க அமைச்சரை உடனடியாக அந்தப் பதவியில் இருந்து நீக்குமாறு கூட்டமைப்பு ட்விட்டரில் பதிவிட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தை தம்மால் உறுதிப்படுத்த முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது. (ம)

## அழிப்பதற்குமுன்...

இந்தச் சம்பவங்களின்போது சிசிரிவி ஆதாரங்களை உடனடியாக சேதப்படுத்துதல் அல்லது அழிக்கும் செயற்பாட்டை உடனடியாகத் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு சராசரி குடிமகன் இந்தச் செயலைச் செய்திருந்தால், அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலிடப்பட்டிருப்பர் என்பதையும் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டினார்.

செல்வாக்குமிக்க இராஜாங்க அமைச்சர் ஒருவர் தனது நண்பர்களுடன் மதுபோதையில், வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்து சிறை மற்றும் தூக்கு மேடைக்குச் சென்றதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதேவேளை குடிபோதையில் இருந்த இராஜாங்க அமைச்சர் கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று கைதிகளை துப்பாக்கி முனையில் மண்டியிடச் செய்து குழப்பத்தை ஏற்படுத்தினார் என்ற செய்தியும் வெளியாகிய நிலையில் அம்பிகா சற்குணநாதன் இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## பாடசாலைகளை...

தார ஒழுங்கு விதிகளுக்கமைய இன்னும் இரண்டு வாரங்களின்பின் திறப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர்கள் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நாட்டில் 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட சுமார் 5,000 பாடசாலைகளை முதலில் திறப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பாலர் பாடசாலைகள் மற்றும் தரம் 6 வரையான வகுப்புக்களை மாத்திரம் கொண்ட பாடசாலைகளை முதலில் திறக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது கல்வித்துறைசார் ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை தடுப்பூசிசெலுத்திக் கொள்ளாத பாடசாலை போக்குவரத்து சேவை ஊழியர்கள் விரைவில் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம)

## ஐஸ் போதைப்...

735 கிராம் ஐஸ் போதைப்பொருள் மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் கடற்படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள வீரசிங்கவின் பணிப்பில் மன்னார் பொலிஸ் நிலையபதில் பொலிஸ் பொறுப்பதிகாரி மஞ்சுளாவின் ஆலோசனையில் தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான குழுவினர் மேற்படி ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மீன்பிடிப் படகு ஒன்றில் வலைக்குள் சுற்றி வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் சந்தேகநபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் இன்றைய மதிப்பில் 100 மில்லியன் ரூபாய் பெறுமதியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் போதைப் பொருள் மற்றும் சந்தேகநபர்கள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

## யாழ்., கிளி...

நீத்த தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

நல்லூர் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நினைவிடத்தில் நேற்று மாலை 6 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன், கட்சியின் ஊடகப்பேச்சாளர் க.சுகாஷ் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் சிலர் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மேலும் கிளிநொச்சியில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-33,100)

## 2,314...

அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 496,423 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 11,605 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 427, 254 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இராஜாங்க...

சிறைச்சாலை முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனடியாக பதவி விலகுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இத்தாலிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் தொலைபேசி ஊடாக நேற்று முற்பகல் அவருக்குப் பணித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிறைச்சாலை ஆணையாளர் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கும் அதேவேளை ரத்வத்தவை பதவி விலக்க வேண்டும் என்று அவருக்கு அறிவித்துள்ளார். (ம)

## யாழில்...

துள்ளார்.

திருமணமாகி ஒரு வருடமேயான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அளவெட்டி வடக்கைச் சேர்ந்த 42 வயதுடைய சதீஸ்குமார் அபிமினி என்ற தாயாரே உயிரிழந்துள்ளார்.

அவரது பெண் குழந்தை நலமுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளது.

"செப்ரெம்பர் 8ஆம் திகதி கர்ப்பவதிப் பெண் உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு கோவிட்-19 சிகிச்சை விடுதியில் மருத்துவக் கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு அன்றைய தினமே பெண் குழந்தை பிறந்துள்ளது.

தாயாருக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-33)

## வடக்கில்...

உயிரிழந்த ஒரு வயதும் 03 மாதமும் நிரம்பிய பெண் குழந்தைக்கு கொரோனா உறுதியாகியுள்ளது.

உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 51 வயதுடையவருக்கு தொற்று உறுதியானது.

மேலும் யாழில் கர்ப்பவதி ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் உயிரிழந்த 72 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருடைய பிசிஆர் மாதிரிகள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

அதன்போதே அவருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக நேற்று 04 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக்காரணமாக சிகிச்சை பெற்றுவந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 04 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நெளுக்குளம், கோவிற்குளம், பம்பைமடுப்பகுதியில் அமைந்துள்ள காப்பகத்தில் இருவர் என அந்தப் பகுதியினை சேர்ந்தவர்களே இவ்வாறு கோவிட் தொற்றால் மரணித்தவர்களாவார்கள். (ம-33,250)

## இலங்கை உயர்...

புதிதாக வருகைதந்த இராஜதந்திர தூதுவர்கள், இந்திய வெளியுறவுச் செயலாளரை சந்திக்கும் நடைமுறைக்கு ஏற்ப இருந்தது.

இந்தக் கலந்துரையாடலின்போது, இருவரும் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களைப்பற்றிவிவாதித்துள்ளனர். (ம)

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து



(கொழும்பு)

**தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.**

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது அவசியம். இருப்பினும் இதுவரையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் ஏதும் இனப்பிரச்சிகைக்கு தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தினார்.**

புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். என்பதை ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் வலியுறுத்தியுள்ளோம்.

ஆரம்பத்தில் செயற்திறனுடன் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக்கைகள் தற்போது மந்தகரமான முறையில் உள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் இனங்களுக்கிடையில் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு புதிய அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட வேண்டும். மாகாண சபை பலப்படுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 2005 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் அப்போதைய ஜனாதிபதியாக பதவி வகித்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் "சர்வகட்சி தலைவர் மாநாடு" அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரையில் அவ்வறிக்கை செயற்படுத்தப்படவில்லை. அந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை தமிழ் - முஸ்லிம் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் வலியுறுத்தினோம். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக்கைகள் ஆரம்பத்தில் வினைத்திறனாக காணப்பட்டாலும் தற்போது மந்தரகமான முறையில் காணப்படுகிறது என்றார். (ம)

### துப்பாக்கியுடன் சிறைக்குச் செல்ல

# அனுமதித்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

அமைச்சரை துப்பாக்கியுடன் சிறைக்குச் செல்ல அனுமதித்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு அமைச்சர் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் செல்வதை சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்? அதிகாரிகளாக இருந்தாலும் சரி சிறைச்சாலைக்குள் அங்கீகாரம் அளிக்கப்பட்டோரைத் தவிர அரசியல்வாதிகளோ எந்த ஒரு அதிகாரியோ துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதித்தது மிகவும் தவறான விடயமாகும்.

சிறைச்சாலைகள் ஒரு விருந்தினர் விடுதி அல்ல. துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சர் தனியாக செல்லாது அவர் தனது நண்பர்களுடன் சென்று இருக்கின்றார்.

வெறுமனே அநுராதபுரம் மாத்திரமல்ல வெலிக்கடை சிறைக்கும் சென்றதாகவும் அங்கு தமிழ் அரசியல் கைதிகளினை மிரட்டியதாகவும் அவர்களை முழங்காலில் இருத்தியதாகவும் கூட ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான விடயங்கள் நடப்பதாக இருந்தால் நிச்சயமாக இதே மாதிரி ஒரு மோசமான சம்பவங்கள் இருக்க முடியாது.

ஆகவே இந்த அமைச்சரின் நடவடிக்கை தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும். இவர் அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர்.

அது தமிழ் அரசியல் கைதியாக இருக்கலாம். ஆனால் ஒரு சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் சென்று பேசுவதற்குக்கூட இவருக்கு உரிமை கிடையாது. எனவே இந்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்தார். (ம-33)

# மேலும் ஒரு தொகுதி ஸ்புட்னிக் தடுப்பூசிகள்

## திங்கள் நாட்டை வந்தடையும்

(கொழும்பு)

இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கு தேவையான 120, 000 ஸ்புட்னிக் தடுப்பூசிகள் எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் முதற்கட்டமாக ஸ்புட்னிக் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கு இவை உபயோகிக்கப்படவுள்ளன.

கண்டி மாவட்டத்தில் 150, 000 பேருக்கு ஸ்புட்னிக் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதோடு அம் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்காக கிடைக்கப்பெற்ற 30,000 தடுப்பூசிகள் இரு கட்டங்களாக வழங்கப்பட்டன.

மருந்து இறக்குமதி, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் நேற்று புதன்கிழமை சுகாதார அமைச்சில் இடம்பெற்றது. இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வாறு நாட்டுக்கு கிடைக்கப் பெறவுள்ள ஸ்புட்னிக் தடுப்பூசிகளை 3 தினங்களுக்குள் மக்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய இரண்டாம் கட்ட தடுப்பூசியும் வழங்கப்பட்டதன் பின்னர் கண்டி மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டோரில் 99 சதவீதமானோருக்கு முழுமையான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு நிறைவடைந்திருக்கும்.

"சுபீசத்தின்நோக்கு" கொள்கை திட்டத்திற்கமைய எதிர்வரும் 4 வருடங்களுக்குள் தேவையான மருந்துகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் சுகாதார அமைச்சு வழங்கும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார். (ம)

### தென்மராட்சி சரசாலையில்

# திடீர் சுகவீனம் இளம்பெண் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி சரசாலைப் பகுதியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் நேற்று புதன்கிழமை அதிகாலை திடீர் சுகவீனமடைந்து மரணமடைந்துள்ளார்.

சுகவீனமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரசாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான பபிசுதா என்ற இளம்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் கொரோனா பரிசோதனை முடிவுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம -30)

# வடமராட்சி புலோலியில் குடும்பஸ்தர் திடீர் மரணம்

(கரணவாய்)

வடமராட்சி புலோலியில் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மரணமடைந்துள்ளார். இவ்வாறு மரணமடைந்தவர் பருத்தித்துறை மிருக வைத்தியசாலை ஊழியரான 59 வயதுடைய சேதுலிங்கம் நந்தகோபாலன் என்பவராவார்.

அவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிசிஆர் பரிசோதனையின் பின்னர் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-60)

# நித்திரைக்கு சென்றவர் காலையில் சடலமாக மீட்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நித்திரைக்குச் சென்ற மீனவர் ஒருவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மீனவர் சுண்டிக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் கடற்தொழிலை முடித்துவிட்டு படுக்கைக்குச் சென்றார்.

அவர் அதிகாலை இறந்த நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அவரது உடல் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இறந்தவர் உப்பு சிலாபம் பகுதியைச் சேர்ந்த முத்துச்சாமி யோகராசா (வயது -55) என்பவராவார். (ம-316)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.